Regd. No. M 3473

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்திரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-௨௮

"முயற்சி திருவினையாக்கும்"

தொகுதி 30	விசுவாவசு௵ ஆவணி - புரட்டாசி௴ 1965 செப்டம்பர்	பகுதி 6

MEMBERS OF THE EDITORIAL BOARD

1. Sri A. K. SITARAMAN, B.A., L.T. (*Editor*)
2. ,, L. MARIAPRAGASAM, B.A., L.T., J.P. (*Publisher*)
3. ,, FRANK DORAISWAMY M.A., M.Ed. (*Journal Secretary*)
4. ,, V. S. SARAVANAN
5. ,, S. NATARAJAN
6. ,, R. RAJAMANICKAM
7. ,, V. PERUMAL
8. ,, M. S. ARULSWAMY.

உள்நாடு :—ஆண்டு சந்தா ரூ. 3-00] [தனிப் பிரதி 25 பை.

பொருளடக்கம்

1. நம் கடமை ... 101

2. கல்வி ... 102

3. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஆசிரியர் சங்கத்தின் கண்டனக் கூட்டம் ... 103

4. செவ்வாய் இரகசியம் துலங்க மாரினர் கோள் உதவுமா? ... 104

5. செவ்வாய்க்கோள் அருகில் கடுகிச் செல்லும் மாரினர் இட்ட பணிகளைச் செய்யும் ... 106

6. குறைகளும், நிறைகளும் ... 108

7. கல்வி எதிரொலி (Education Echo) ... 113

Printed by Rev. Bro. Antony at the St. Louis Institute Press, Adyar, Madras-20 and Published by Sri L. Mariapragasam, B. A., L. T., J. P. for the S. I. T. U. at Raja Annamalaipuram, Madras-28.

Editor: Sri A. K. Sitharaman, B. A., L. T.

பாலர் கல்வி

தொகுதி 30

விசுவாவசு ஹு ஆவணி—புரட்டாசி மீ
1965—செப்டம்பர்

பகுதி 6

நம் கடமை

அமைதியே நாடும் நம் நாடும், அழிவையே தேடும் பாகிஸ்தானமும் ஐக்கிய நாட்டமைப்பின் பாதுகாப்புக் குழுவால் நிறைவேற்றப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டன. அவ்வொப்பந்தப்படி போரை நிறுத்தினேம் நாம்; ஆனுஅ, ல்வர்களோ போரைத் தொடர்ந்து நடத்துகிருர்கள். அவர்களின் துப்பாக்கிகளும், பீரங்கிகளும் இன்னும், ஓயவில்லே. தோற்றும் அவர்கள் மண்ணுசையைத் துறக்கவில்லே. நம் வீரர்களோ நம் மண்ணைக் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பசி நோக்காமல், கண் துஞ்சாமல், பிற நாடுகளின் ஆதரவுண்டா? இல்லேயா? என்று பார்க்காமல், செவ்வியருமையும் பாராமல், இகழ்ச்சியும், புகழ்ச்சியும் பொருட்படுத்தாமல் எல்லேயிலே இந்திய வீரர்கள் சிந்திய—சிந்துகின்ற செந்நீர் இந்திய ஒற்றுமை என்னும் பயிருக்குப் பாய்ச்சும் நன்னீராகும். ஒரு பக்கம் சீனச் சர்வாதிகாரமும், மறு பக்கம் பாகிஸ்தான் சர்வாதிகாரமும் சேர்ந்துகொண்டு இடையேயுள்ள இந்தியச் சனநாயகத்தை வீழ்த்த எல்லேயிலே எல்லேயில்லாத் தொல்லேகளேத் தொடர்ந்து தந்து கொண்டிருக்கின்றன. பொங்கி எழுந்த பாரத வீரர்கள் தங்கள் உயிர் தந்தும் சனநாயகத்தின் உயிரைக் காக்கும் பணி புனிதப் பணியாகுமன்றே?

இந்தியத்தாய் நம் எல்லோருக்கும் தாய். அவள் வாழ்வு நம் வாழ்வு. அவள் தாழ்வு நம் தாழ்வு. நம்மைப் பெற்றெடுத்த தாயினும் பெருந்தாய், அருந்தாய் அவள். அவள் வாழ்வைக் குலேக்கவரும் கொடியோர் கூட்டத்தை நிலே குலேந்து ஓடச் செய்யப் போர் முனையில் போர் வீரர்கள் உள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக ஏர் முனையில் உழவர்கள் உள்ளார்கள். தொழிற் சாலேகளிலும், ஆலேகளிலும் தொழிலாளர்கள் உற்பத்தியைப் பெருக்குகின்ருர்கள். நம் வீரர்கள் மிரட்டும் பகைவர்களே விரட்டுவது உறுதி என்ற நினேப்பில், பொது மக்களிற் பலர் குருதி கொடுக்க முன் வருகிருர்கள். அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்திய ஒற்றுமையின் இன்றியமையாமையை முரசென முழங்குகின்ருர்கள்; அரசினரோடு தோளோடு தோள் நின்று பணி புரிகின்ருர்கள். அகத்தில் தூய்மையும், கடமையுணர்வும் உடைய அகப்படை வீரர்கள் தங்கள் கடமையைச் செவ்வனே புரிகின்ருர்கள்; புல்வேறு குழுக்களாகப் பிரிந்து பல்வேறு துறைகளிலும் பயிற்சி பெறுகின்ருர்கள். பாதுகாப்பு நிதிக்குப் பாமரர், பணக்காரர் என்ற வேறுபாடின்றி எல்லோரும் உள்ளம் உவந்து நிதி கொடுக்கின்ருர்கள். துள்ளித் திரியும் பள்ளிச் சிறுவர்களும், கண்களாம் பெண்களும், கல்லூரிக் காளேகளும், நடிகர்களும், பிறரும் 'உலகே! நாங்கள் உணர்வால் ஒன்றுபட்டிருக்கிருேம்.' என்னும் உண்மையை உலகிற்கு உணர்த்துகின்ருர்கள். இச்சூழ்நிலேயில் ஆசிரியர்களாகிய நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் யாவை?

நாம் செய்யவேண்டிய கடமைகள் எண்ணிறந்தன. அவற்றுள் இன்றிமையாத சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றேன்.

"கங்கை நதிப்புறத்துக்
கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலேக்கு
மாறு கொள்ளுவோம்"

என்று பாரதியார் ஏன் பாடினுர்?

இந்தியா ஒன்ருக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில்தான் பாடினுர். நாம் பல்வேறு மொழிகளேப் பேசலாம்; மதங்களேப் பின்பற்றலாம்; மாநிலங்களேச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். எனினும் நமக்குள்ளே பிரிவும், பிளவும்

பிணக்கும் இருத்தல் கூடாது. மாணவர்களின் பிஞ்சுள்ளங்களில் ஒற்றுமை உணர்வை, உணர்ச்சியை வளர்த்துவிட வேண்டும். வேற்றுமை விதையை மறந்தும் மாணவரிடையே விதைத்தல் கூடாது. பள்ளிகளில் வளர்த்து விடும் ஒற்றுமை உணர்ச்சி இன்று மட்டுமல்ல என்றும் நின்று நிலைத்திருக்கக் கூடியதாகும். ஒற்றுமையைத் தகர்க்கும் தடைச் சுவர்களாம் சாதி உணர்ச்சியை சிறுர்களின் உள்ளத்தினின்று தகர்த்தெறிவோமாக.

"சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

என்ற அறிவுரையின் மேன்மையை எண்ணுங்கள்; எண்ணியதைச் செயலிற் காட்டுங்கள்.

கோவையில், ஆசிரியர்கள் வீரர்களின் குடும்பங்களுக்குச் செய்யும் சேவை பாராட்டத்தக்கது. அவர்கள் கோவையில் வீரர்களின் குடும்பங்கள் எங்கெல்லாம் இருக்கின்றன என்பதைக் கண்டு பிடித்து அங்கெல்லாம் சென்று, போர்க்களத்திலுள்ள வீரர்களுக்கு மடல் வரைதல், அரசின் உதவிகளை வாங்கித்தருதல் போன்ற பணிகளில் ஈடுபட்டிருக்கிறர்கள். அவர்களை மற்ற ஆசிரியர்களும் பின்பற்றுவார்களாக.

அகப்படையிலுள்ள ஆசிரியர்கள் அப்படையிலேயே இருந்து உள்நாட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்களாக. மற்ற ஆசிரியர்கள் தீயணைத்தல், முதலுதவி போன்ற துறைகளில் பயிற்சி பெறுவார்களாக; பெற்ற பயிற்சியைப் பிறருக்கும் கற்றுத் தருவார்களாக.

இன்றும் இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்றவாறு ஆசிரியர்கள் நெருக்கடி நேரமான இந்நேரத்தில் நேர்மை மிகு பணி புரிந்து நற்பெயர் எடுப்பார்களாக; வருமானம் குறைவெனினும் நிறைமனத்துடன் ஒரு நாள் ஊதியத்தையேனும் பாதுகாப்பு நிதிக்குத் தந்து உதவுவார்களாக.

வெல்க தாய்த்திரு நாடு!

★

கல்வி

1. ஆசிரியர் பாடம் கேட்கும் பாலகர்காள்—சற்றும்
மாசிலாமல் வாழ வேண்டும் பாலகர்காள்.

2. பள்ளி சென்று கல்விகற்கும் பாலகர்காள்—தூய
உள்ளத்தோடு கற்க வேண்டும் பாலகர்காள்

3. தேடிச் செல்வீர் உண்மை தன்னைப் பாலகர்காள்—அதை
வாடிடாமல் நாடிடுவீர் பாலகர்காள்.

4. ஆட்டத்திலே நாட்டம் கொள்வீர் பாலகர்காள்—நீங்கள்
பாட்டில் கூடப் பங்கு கொள்வீர் பாலகர்காள்.

5. கற்றகல்வி பள்ளியிலே பாலகர்காள்—அங்கே
பெற்ற செல்வம் ஆகுமன்றோ பாலகர்காள்.

6. பெற்றதெல்லாம் எண்ணியபின் பாலகர்காள்—சென்று
மற்றவர்க்களித்திடுவீர் பாலகர்காள்.

S. ரத்னம், M.A., B.T.
துணைப் பேராசிரியர்
அரசினர் பயிற்சிக் கல்லூரி, குமாரபாளையம்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஆசிரியர் சங்கத்தின் கண்டனக் கூட்டம்

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பை எதிர்த்து நாட்டரசன் கோட்டையில் நடைபெற்ற ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற்குத் திரு எம். எஸ். அருள்சாமி தலைமை தாங்கினார். செயலாளர் திரு இ. தர்மநாதன் அறிக்கை படித்தார்.

தலைவர் தமது உரையில் நம் பாரத நாட்டின் மீது பாகிஸ்தான் அக்கிரமமாக ஆக்கிரமித்திருக்கிறது. இதை நாம் முறியடியத்தாக வேண்டும். ஆசிரியர்கள் அனைவரும் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு நம் நாட்டைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட ஒரு நாள் ஊதியத்தை வழங்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டவுடன் ஆசிரியர்கள் அனைவரும், நாட்டைக்காப்போம். வெற்றி நமதே, ஒரு நாள் ஊதியம் தருவோம் என மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

கூட்டத்தில் திருவாளர்கள் எஸ். கருப்பையா, எம். அமிர்தசாமி, வி. அரங்காசன், திருவாட்டிகள் ஆர். சரோசா, எஸ். மகமுசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். செயலாளர் நன்றி கூறியபின் நாட்டுப்பண் பாடினர்.

தொல்லை தரும் பாகிஸ்தானை முறியடிப்போம் வாரீர்!

அதோ போர்ப்பரணி கேட்கிறது. நமது இதயத்தில் அல்ல. எல்லையிலே. தொல்லைதரும் பாகிஸ்தானை முறியடிக்க ஏறு நடை போட்டு எக்காள மிட்டு முன்னேறுகின்றனர் நமது படையினர். வீர நடை போட்டு வெற்றி மேல் வெற்றி பெறும் அவர் தம் வீரம் வளர்க.

அமைதி வழி நின்று அறம் காத்து அறப்பணி புரிந்து அனைத்துலக வாழ்வுக்கு அயராது பாடுபடும் நம் பாரதம் இன்று களம் அமைக்கவும், படை நெருக்கவும், போர் தொடுக்கவும் தொடங்கியிருக்கிறது. பொல்லாங்குக்காரர் தம் பொறுப்பற்ற தனத்தால் அன்றோ இவை விளைந்தது என்று நல்லெண்ணம் உள்ள நாடுகளும் நாமும் உணரவேண்டும்.

வீரம் மணக்கின்ற நாடு, வெற்றிசிறக்கின்ற நாடு நம் நாடு. அதன் வீரமும், விவேகமும் இன்று மறைந்து விடவில்லை. வீட்டுக்கு வீடு, ஊருக்கு ஊர், மறவர் திருக் கூட்டம். மக்கள் அணி திரண்டு நிற்கிறது. நம் தாய்த் திரு நாட்டிற்காக எதையும் கொடுக்கத் தயாராகிவிட்டது.

நம் கடமை என்ன? இதை நாம் சற்று உணரவேண்டும். ஒரு நாள் ஊதியம்—முடிந்தால் 10 நாள் ஊதியம்—நம் நாட்டுப் பாதுகாப்பிற்காக வீரர்களுக்கு உதவ முன் வரவேண்டும். சிறு துளி பெரு வெள்ளம். நாடு வாழ்ந்தால்தானே நாமும் வாழ முடியும்? ஊதியம் வழங்கி விட்டால் அதோடு நமது கடமை தீர்ந்து விடவில்லை. போர் முனைக்குச் சென்ற இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு நாம் அடிக்கடி சென்று அவர்களுக்கு ஆறுதல் தேறுதல் கூறுவதோடு தேவையான உதவிகளையும் செய்யவேண்டும். நமது பொறுப்பும் கடமையும் மகத்தானவை.

கிராம மக்களிடையே இன்று நடைபெறும் யுத்த நிலைமைகளை எடுத்து விளக்குவதோடு, வதந்திகளைப் பரப்பிப் பீதியை உண்டாக்கும். பேடிகளுக்கு அறிவுரை கூறி, ஆங்காங்கே கண்டனக் கூட்டங்களைக் கூட்டி நம் பாரதநாடு சிறக்க நாம்ஒன்று பட்ட உள்ளத்தவராய்த் தோளோடு தோள் கொடுத்துப் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பை முறியடித்து நம் புண்ணிய பாரதத்தைக் காப்பாற்ற முன் வருவோமாக. வெற்றி நமதே. வாழ்க பாரதம்! வளர்க வீரர்களின் வீரம்!!

M. S. அருள்சாமி
நாட்டரசன் கோட்டை

செவ்வாய் இரகசியம் துலங்க மாரினர் கோள் உதவுமா?

குறிப்பு: சென்ற ஆண்டு நவம்பர் மாதம் அமெரிக்காவிலிருந்து கிளம்பிய செயற்கைக் கோள் மாரினர்-4 இம்மாதம் 15-ஆம் தேதி செவ்வாய்க் கிரகத்தைக் கடந்து செல்லும். அப்பொழுது அது செவ்வாயைப் படம் பிடிக்கும்; இதுவரை இவ்வளவு அண்மையிலிருந்து செவ்வாய்க்கோள் படம் பிடிக்கப்பட்டதில்லை. மாரினர் எடுக்கும் படங்கள் செவ்வாயின் இயல்புகளை அறிய உதவும்.

[கிரிஷன் குஜ்ரால்]

செவ்வாயில் உயிரினம் உண்டா? மர்மமாக உள்ள இந்தச் செயற்கைக் கோளின் புதிருக்கு என்றாவது ஒரு நாள் விடை துலங்குமா? அல்லது எப்போதும் அது புதிராகவே இருக்கப் போகிறதா?

இத்தகைய கேள்விகள் பல ஆண்டுகளாகவே மக்கள் ஆர்வத்தைத் தூண்டி வந்துள்ளன. சூரியனைச் சுற்றி வரும் கிரகங்களில் பூமியைப் போல் உயிரினம் உள்ள கிரகம் வேறு ஏதாவது இருக்குமா என்று அறிய மக்கள் என்றும் ஆவல் கொண்டுள்ளனர்.

ஜூலை 15-ஆம் தேதிக்குப் பிறகு இக் கேள்விகள் சிலவற்றுக்கு விடை கிடைக்கக்கூடும். அன்று தான் மாரினர்-4 செவ்வாயைக் கிட்டத்தட்ட 5,400 மைல் தூரத்தில் கடந்து செல்லப் போகிறது. அப்போது அது பூமியிலிருந்து புறப்பட்டுக் கிட்டத்தட்ட எட்டு மாதம் ஆகியிருக்கும்; 13 கோடி மைல் பிரயாணம் செய்திருக்கும்.

நவம்பர் 28-ஆம் தேதி கென்னடி முனையிலிருந்து கிளம்பிச் சூரியனைச் சுற்றிக் கொண்டு செல்லும் மாரினர்-4, செவ்வாயை நெருங்கி அதன் குறுக்கே 200 மைல் அகலத்துக்குட்பட்ட இடமெல்லாம் தெரியும்படி 21 படங்கள் எடுக்க வேண்டும்.

படம் எடுத்து அனுப்பும் ஏற்பாடு

படம் எடுப்பதற்கு மாரினர் கோளில் ஒரே ஒரு காமிரா இருக்கிறது. படங்கள் மாரினர் கோளில் நாடாவில் பதிவு செய்து வைக்கப்படும். பின்னர் அவை மின்காந்த அலைகள் மூலம் சிறு சிறு "துணுக்குகளாக" அனுப்பி வைக்கப்படும். இப்படங்களில் சில, பூமியிலிருந்து டெலஸ்கோ வழியாக எடுத்த படங்களையும் விட நூறு மடங்கு தெளிவாகச் செவ்வாயின் தரையை விளக்கமாகக் காட்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

செவ்வாய்க்கு 7,000 மைல் தூரத்தில் வரும் பொழுதே மாரினர் அதைப் படம் பிடிக்கத் தொடங்கும். அதன் பின் 10 மணி நேரத்திற்குள் அது அப் படங்களைப் பூமிக்கு அனுப்பத் தொடங்கும். படங்களைத் தாங்கி வரும் மின்காந்த அலைகள் விநாடிக்கு 1,86,000 மைல் வேகத்தில் வருமானாலும், ஒரு அலை பூமியை எட்ட 12 நிமிடங்கள் ஆகும். ஆகவே, ஒரு படம் முழுமையும் வந்து சேர எட்டு மணி நேரம் பிடிக்கும்.

இந்தப் படங்களிலிருந்து என்ன தெரியும்? செவ்வாயான் ஒருவன் டிராக்டர் ஓட்டுவதும், காரில் செல்வதும், அதுவா இதுவா என்று வழக்காடப்படும். "வாய்க்கால்களில்" படகோட்டுவதும் தெரியுமா? அல்லது, ஓர் உயிரும் வாழ்வதாகத் தோன்றாத, குடியிருக்கத் தகுதியற்ற குளிரும் வறட்சியும் நிறைந்த பகுதிகள் தெரியுமா?

என்னென்ன தெரியும்?

உயிரினம் உள்ளதைக் காண்போம் என்று சொல்வதற்கான சாத்தியக் கூறு அதிகம் இல்லை. மலைகளும் குழிகளும் போன்றவை நன்கு தெரியும். தாவரங்கள் உண்டு என்று நினைப்பதற்குக் காரணமாக உள்ள நிற மாறுதல்கள் பற்றி நன்கு அறியவும் வழி பிறக்கலாம். செவ்வாயின் வட, தென் துருவங்களில் காணும் வெண்மை இலேசான பனிப் படலமா அல்லது பூமியின் தென் துருவக் கண்டத்தை மூடி அடுக்கியிருக்கும் உறைபனி போன்றதா என்பதையும் மாரினரின் செவ்வாய்ப் படங்கள் காட்டக் கூடும்.

மாரினர் கோளினால் செவ்வாய் பற்றி எல்லாம் தெரிந்துவிடும் என்று எதிர்பார்க்கக் கூடாது என்று மாரினர் திட்டத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறுகிறார்: "கிரகத்தைப் பற்றி நாம் காணப் போவது அதன் முழு அளவில் நூற்றுக்கு ஒரு பங்கு கூட இல்லை. கிரகம் முழுமையும் பார்க்க வேண்டுமானால், 4,000 புகைப்படங்கள் எடுத்தாக வேண்டும். நாம் எடுக்கப் போவதோ 21 தான்."

படம் எடுத்து முடிந்ததும், மாரினர் செவ்வாயின் பின்புறம் செல்லும்; ஏறக்குறைய ஒரு மணி நேரத்துக்கு அதன் ரேடியோ அலைகள் நமக்குக் கிடைக்கமாட்டா. அது மறு பக்கம் தலைகாட்டும் போது, அதன் ரேடியோ அலைகள் செவ்வாயின் வாயு மண்டலத்து வழியே வரும்; அதனால் அலைகளின் நீளமும் ஆற்றலும் மாறும்; செவ்வாயின் வாயு மண்டலத்தைப் பற்றியும், காந்த மண்டலத்தைப் பற்றியும், ஈர்ப்பு விசையைப் பற்றியும் அறிவதற்கு இந்த மாற்றங்கள் பெரிதும் துணை செய்யும்.

அதன் பின், மாரினர் சூரியனைச் சுற்றிக் கொண்டு தன் வழியே செல்லும். செவ்வாயில் உயிரினம் உண்டா என்ற கேள்வி அதற்குள் தீர்ந்திருக்குமா?

வாதப் பிரதிவாதங்கள்

செவ்வாயில் ஏதோ ஒரு வகைத் தாவரங்கள் இருக்கின்றன என்பது வானியல் அறிஞர்கள் பலருடைய நம்பிக்கை. இவ்வாறு தாவரங்கள் இருந்தால் ஏதோ ஒரு வகை விலங்கினங்களும் இருக்க இடமுண்டு என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஒரு வகைப் பூர்வமான தாவரங்கள் செவ்வாயில் இருந்தாலும் எந்தவகையான பிராணிகளும் அங்கு இருக்க முடியாது என்று பிற விஞ்ஞானிகள் அடித்துச் சொல்லுகிறார்கள்.

நமது சூரிய மண்டலத்தை உள்ளடக்கியுள்ள பால்வெளி நட்சத்திரக் கணங்களில் 60 கோடிக் கிரகங்களில் விலங்கினங்கள் இருக்கலாம் என்று கொலம்பியா பல்கலைக்கழக வானியல் விஞ்ஞானி லாய்ட் மெட்ஸ் கூறுகிறார்.

ஆனால், அமெரிக்க விண்வெளி நிலையத்தின் விஞ்ஞானி டாக்டர் சு ஷு உறுவாங் அதை ஒப்புக் கொள்ளவில்லை. பால்வெளியிலுள்ள நட்சத்திரக் கூட்டங்களின் கிரகங்களில் நூற்றுக்கு ஒன்று அல்லது இரண்டில்தான் உயிரினம் இருக்க முடியும் என்கிறார் இவர்.

பூமியிலிருந்து ஏறக்குறைய 30 நூறுயிரங் கோடி மைல்களுக்குள் உள்ள இரண்டே இரண்டு நட்சத்திரங்கள்தாம் தம்மைச் சுற்றிவரும் கிரகங்களில் விலங்கினம் வாழத்தக்க நிலையில் உள்ளன என்பது இவரது கருத்து. ஆயினும் காளான், பாசி முதலியன அதிகம் வளரக்கூடும் என்று இவர் கருதுகிறார்.

அமெரிக்க விண்வெளி நிலையத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, யு. எஸ். தேசிய விஞ்ஞானக் கழகத்தின் விண்வெளி விஞ்ஞானக் குழு ஓர் ஆராய்ச்சிக் கூட்டம் கூட்டியது. "தற்சமயம் கிடைத்துள்ள தகவல்களை யெல்லாம் வைத்துப் பார்க்கும் போது செவ்வாயில் உயிரினங்கள் வாழுவதும், உயிரினம் அங்குத் தனியே தோன்றியதும் அறிவுக்குப் பொருத்தமானதென்றே நாங்கள் நம்புகிறோம்" என்று அக் கூட்டத்தின் அறிக்கை கூறுகிறது.

1969-73 காலத்தில் செவ்வாயை ஆராய்வதற்கு ஏற்றவாய்ப்புகள் இருக்கின்றன என்றும், அவற்றைப் பயன்படுத்த இப்பொழுதே நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும், 1971 வாக்கில் அங்குப போய் இறங்கி ஆராய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும், எப்படியும் இது 1973-க்குப் பிந்தக் கூடாது என்றும் அக் கூட்டத்தின் அறிக்கை சுட்டிக் காட்டியது.

"பெரும் பாலைவனம்"

1963ஆ-ம் ஆண்டு மார்ச் மாதத்தில், அமெரிக்கா இன்னொரு முறையில் செவ்வாயை ஆராய்ந்தது. மூன்று டன் எடையுள்ள ஒரு டெலஸ்கோப்பைப் பூமிக்கு 215 மைல் உயரத்துக்கு அனுப்பினார்கள். அதில் தாமே இயங்கும் கருவிகள் பல இருந்தன. அவை, 12 மணி நேரம் செவ்வாயை ஆராய்ந்து, தகவல் கொடுத்தன. செவ்வாய்க் கிரகம் ஒரு பெரும பாலைவனம் என்றும், அங்குக் காற்று வீசுவது தவிர வேறு இல்லை என்றும் அதன் வாயுமண்டலத்தில் நூற்றுக்கு ஒரு பங்குக்கும் குறைவாகவே நீராவி இருக்கிறது என்றும் அந்தத் தகவல்கள் குறிப்பிட்டன.

அத்தகைய வாயுமண்டலததில் மனிதன் உயிர் வாழ முடியாது. பூமிக்கு 56,000 அடி உயரத்தில் உள்ள வாயுமண்டலம் போன்றது அது. செவ்வாயின் மத்திய ரேகைப் பகுதியில் நண்பகலில் வெப்ப நிலை பூஜ்யத்துக்கு மேல் 50 டிகிரி (பாரன்ஹீட்) அளவாகவும் இரவில் பூஜ்யத்துக்குக் கீழ் 90 டிகிரி (பாரன்ஹீட்) அளவாகவும் இருக்கிறது.

பூமியைப் போல் செவ்வாயும் சூரியனின் பிள்ளை. அதன் உடன் பிறந்தவர்கள் இன்னும் ஏழு பேர். புதன், வியாழன், வெள்ளி, சனி, யுரானஸ், நெப்டியூன், புளூட்டோ என்பவை அவர்களின் பெயர்கள். இரவில் நமக்குச் சந்திரனுக்கும் சுக்கிரனுக்கும் அடுத்தபடி பிரகாசமாகத் தெரிவது செவ்வாயே.

சூரியனைச் சுற்றி வரும் ஒன்பது கிரகங்களில் புதன், வெள்ளி பூமிக்கு அடுத்தபடி நாலாவதாக இருப்பது செவ்வாயாகும். சூரியனிலிருந்து அதன் தூரம் 13.9 கோடி மைல்; பூமிக்கும் சூரியனுக்குமிடையிலுள்ள தொலைவை விட இது நூற்றுக்கு ஐந்து பங்கு அதிகம்.

செவ்வாய் பூமிக்கு மிகவும் அண்மையில் வரும் போது அதன் தொலைவு 3.4 கோடி மைல். சந்திரனுக்கும் நமக்கும் உள்ள தொலைவு 2,40,000 மைல்களே.

செவ்வாயும் பூமியும் சூரியனை ஒரே திசையில் தான் சுற்றி வருகின்றன. சுற்றிவரும் வேகங்கள் மட்டும் வெவ்வேறாகும். சூரியனைச் செவ்வாய் ஒரு சுற்றுச் சுற்ற பூமியின் நாட்களில் 687 நாட்கள் ஆகின்றன. சூரியனைப் பூமி ஒரு சுற்றுச் சுற்ற ஆகும் காலம் 365 நாட்களுக்குச் சற்றே அதிகம்.

விரைவில் தெரியும்

சூரிய மண்டலத்திலுள்ள சிறிய கிரகங்களில் ஒன்று செவ்வாய். பூமியின் குறுக்களவு 7,918 மைல், செவ்வாயின் குறுக்களவு 4,216 மைல்.

ஏழரை மாதங்களாக இனிது இயங்கி வந்துள்ள மாரினர்-4 இன்னும் சில நாட்களுக்கு நன்கு இயங்குமானால், செவ்வாயின் தோற்றத்தை அண்மைக் காட்சியாகக் காட்டும் வரலாற்று முதன்மையான படங்களை அது நமக்கு எடுத்தனுப்பும். சூரிய மண்டலத்து மற்றக் கிரகங்களில் உயிரினம் உண்டா என்று ஆராயும் மனிதனின் முயற்சியில் அது ஒரு மாபெரும் முன்னேற்றமாக விளங்கும். ★

செவ்வாய்க்கோள் அருகில் கடுகிச் செல்லும் மாரினர் இட்ட பணிகளைச் செய்யும்

விஞ்ஞானிகள் நம்பிக்கை

(ஐக்கிய அமெரிக்கச் செய்திச் சுருள்)

வாஷிங்டன், ஜூலை 2— "எல்லாம் காம் நினைக்கிறபடி நடக்குமென நம்புகிறேன்" அமெரிக்காவின் மாரினர் திட்ட மானேஜர் டான்ஷ்னைடர்மன் எவ்வளவு ஜாக்கிரதையான போக்கைக் கடைப்பிடிக்கிறார் என்பதை இந்த வாக்கியம் விளக்கும். திட்டமிட்டபடி, செவ்வாய்க் கோளை மாரினர் - படமெடுக்கும் நிகழ்ச்சி நடைபெற இன்னும் இரு வாரங்களே உள்ளன. இது பற்றிக் கேட்ட போதே டான்ஷ்னைடர்மன் அவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

ஏழு மாதங்களாக நடைபெற்றுள்ளது போல எல்லாம் தொடர்ந்து சீராக நடந்தால் ஜூலை 14-ஆம் தேதி மாரினர், செவ்வாய்க் கோளைப் படங்கள் எடுக்கும். முடிந்த அளவு மிக அருகிலிருந்து செவ்வாய்க் கோள் படம் பிடிக்கப்படுவது வரலாற்றிலேயே இதுவே முதல் தடவை. செவ்வாய் ஒரு சிவப்பு நிறக் கோள்; அங்கு உயிர் வாழ்க்கை இருப்பதற்குரிய அறிகுறிகள் உண்டு.

டான் ஷ்னைடர்மனும், மாரினர் 4-க்கு வடிவம் வகுத்து, அதை உருவாக்கி, சென்ற நவம்பர் முதல் விண்வெளியில் அது 13 கோடி மைல்கள் பிரயாணம் செய்ய வகை செய்த மாரினர் குழுவினர் அனைவரும் இறுதி நேரத்தில் பிசகு ஏதும் நேர்ந்து விடக் கூடாதென்பதில் அக்கறை காட்டி வருகின்றனர். அவ்வாறு நேர்ந்தால் அது, 1965-ஆம் ஆண்டின் தலைசிறந்த விஞ்ஞான, தொழில்நுட்ப முயற்சியான இது வெற்றி பெறுமல் செய்துவிடக் கூடுமல்லவா? எனவேதான் அவர்கள் நம்பிக்கையோடு ஜாக்கிரதையாகவும் இருந்து வருகின்றனர்.

மாபெரும் சாதனை

300 ஆண்டுகளுக்கு முன்பு, முதல் டெலஸ்கோப் வழியாகக் கலீலியோ நிலாவைத் துருவிப் பார்த்த பின்பு, வானியலில் ஏற்படப் போகும் மாபெரும் சாதனை, செவ்வாய்க் கோளை அருகி விருந்து படமெடுக்கும் முயற்சியே என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இரண்டு மைல் குறுக்களவுள்ள பொருட்களைக் காட்டும் மாரினர் படங்கள், பூமியிலுள்ள பேராற்றல் படைத்த டெலஸ்கோப் கருவிகள் வழியாக எடுக்கப்படும் படங்களை விட 100 முதல் 200 மடங்கு வரை தெளிவாக இருக்கும். இவ்வளவு தெளிவாக இருந்தாலும் கூட, "செவ்வாயில் உயிர் வாழ்க்கை உண்டா?" என்ற கேள்விக்கு இப்படங்கள் விடையளித்து விடமாட்டா.

செவ்வாயில் காணப்படும் "கால்வாய்கள்" யாவை, எப்படிப் பட்டவை என்பது பற்றி இப்படங்கள் புதிய விவரங்கள் தெரிவிக்கலாம். செவ்வாயில் குறுக்கும் நெடுக்குமாக ஓடும் இக்கால்வாய்கள். அறிவுள்ள உயிர்கள் வெட்டிய பாசனக் கால்வாய்கள் என்று 19-வது நூற்றாண்டு வானியல் அறிஞர்கள் கூறினர். ஆனால் இவை, செவ்வாய்க் கோள் குளிர்ச்சியடைந்தபோது ஏற்பட்ட பிளவுகள் என்று இப்போது கருதுகிறார்கள்.

செவ்வாயில் காணப்படும் கருப்பும், இளங் கருப்புமான திட்டுகளிலிருந்து அங்குச் செடி கொடிகள் உண்டு என்று அறிஞர்கள் பொருள் கொள்கின்றனர்; இது சரியா என்பன போன்ற விவரங்களை மாரினர் எடுக்கும் படங்கள் தெரிவிக்கக் கூடும். பாலைவனத்துக்கும் மற்றப் பகுதிகளுக்கும் இடையேயுள்ள வேற்றுமைகளை அவை துலக்கக் கூடும். (செவ்வாயில் பெரும் பகுதி புயல் வீசிய ஒரு பாலைவனம் என்ற ஒரு கருத்தும் உண்டு.)

துணை முகச் சான்று

செவ்வாயை மாரினர் விரைவாகக் கடந்து செல்கையில், செவ்வாயின் சுற்றுப் புறச் சூழ்நிலை

வழியாக அது அனுப்பும் ரேடியோ அலைகள், அந்தச்சூழ் நிலையிலுள்ள ஈரம் முதலிய அம்சங்கள் பற்றித் துலக்கும். இப்படிக் கிடைக்கும் விவரங்கள் செவ்வாயில் உயிர் வாழ்க்கைக்குரிய வாய்ப்புகள் உண்டா என்றறியத் துணைமுகமான சான்றுகளாகும்.

மாரினர் கோளிலுள்ள மற்றக் கருவிகள - இவையும் படமெடுப்பதற்கு இணையான முக்கியம் வாய்ந்தவை என விஞ்ஞானிகள் கருதுகின்றனர் - செவ்வாயில் காந்த மண்டலம் உண்டா; கோளைச் சுற்றிலும் வான் ஆலன் கதிரியக்க அடுக்குப் போன்ற அடுக்குகள் உண்டா என்று கண்டறிவதை நோக்கமாகக் கொண்டவை.

செவ்வாய் அருகில் செல்லும் மாரினர் பயணம் மட்டுமே - படங்களோ அல்லது மற்ற விவரங்களோ கிடைக்காமற் போனாலும் கூட - 1965 - ஆம் ஆண்டின் ஏவுகணை இயலில் ஒரு பெரும் வெற்றியாக மதிப்பிடப்படும்.

ஏனெனில், சற்றும் பிசகாத - மாறுத பாதையில் மாரினர் 32½ கோடி மைல் பிரயாணம் செய்து, செவ்வாய்க்கு 56,000 மைல் அருகில் செல்லும். ஃபிளோரிடா மாநிலத்திலுள்ள கென்னடி முனையிலிருந்து 1964 நவம்பர் 28-ஆம் தேதி பிரயாணம் செய்யத் தொடங்கிய மாரினர், மேற்சொன்னவாறு செவ்வாய் அருகில் செல்கையில் சூரியனை அரைச் சுற்று வலம் வந்திருக்கும்.

செவ்வாய்க் கோளை மாரினர் கடந்து செல்கையில் அது பூமியிலிருந்து செங்குத்தாக 13 கோடியே 40 லட்சம் மைல் உயரத்தில் இருக்கும்.

தொலைவும் காலமும்

ஏகப்பட்ட தொலைவில் செல்வதால், ஒரு தடவையில் மாரினர் ஒரு படத்தின் ஒரு சிறு பகுதியையே அனுப்பும். ஒரு நிமிஷத்துக்கும் குறைந்த காலத்தில் எடுக்கப்பட்ட ஒரு படத்தை அது பூமிக்கு அனுப்ப எட்டு மணி நேரத்துக்கு மேலாகும். மாரினர் ஒரு வினாடிக்கு 81/3 தகவல் - துணுக்குகளே அனுப்ப முடியும். ஒரு துணுக்கு என்பது ஒரு யூனிட் தகவல்.

ஒவ்வொரு படமும் 40,000 புள்ளிகள் கொண்டது; ஒவ்வொரு புள்ளியும் ஆறு தகவல் - துணுக்குகள் கொண்டது. வெள்ளை முதல் கருப்பு வரையுள்ள 64 வகை இளங் கருப்பு நிறங்களில் ஏதாவது ஒன்ருக இருக்கும் ஒவ்வொரு புள்ளியும்.

ஒவ்வொரு படத்தையும் மாரினர் பூமிக்கு அனுப்ப நெடுங்காலம் பிடிப்பதால், ஒரே படத்தின் பகுதிகளை பூமியிலுள்ள இரண்டு நிலையங்கள் பெறலாம். அது ஒரு படத்தை அனுப்பத் தொடங்குகையில், தென் ஆஃப்ரிக்காவில் ஜொஹன்ஸ்பர்க் நகருக்கு மேலே இருக்கலாம். படம் அனுப்புவது முடிவடையும்போது அது அமெரிக்காவில் கலிஃபோர்னியா மாநிலத்தில் கோல்டுஸ்ட்டோன் நகருக்கு மேல் போயிருக்கும்.

கணக்கிடு (கம்ப்யூட்டர்) கருவிகளும் புள்ளிப் புகைப்பட (டிஜிட்டல்ஃபோட்டாகிராஃபி) முறைக் கருவி ஒன்றும் நாடாவில் பதிவான புள்ளிகளைப் படங்களாக மாற்றும்.

★

ஓர் அறிவிப்பு

ஆசிரியர்கள் கல்வி தொடர்பான செய்திகளைத் தெரிந்து கொள்ளவும், பொருத்தமான கருத்துக்களைத் திருத்தமாக வெளியிடவும் விரும்பினுல், தென்னிந்திய ஆசிரியர்ச் சங்கத்தின் பொதுச் செயலாளராகத் திகழும் திருவாளர் மரியப்பிரகாசம் J. P. அவர்களுக்குக் கீழ்க்கண்ட முகவரிக்கு மடல் விரைந்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அமல நிலையம்,
6, கச்சேரி ரோடு,
மயிலை, சென்னை - 4.

குறைகளும் நிறைகளும்

By

J. வின்ஸ்டன் மத்தியாஸ்

[நம்மாநிலத்தில் தற்பொழுதுள்ள கல்வி அமைப்பில் ஏற்பட்டிருக்கும் பல குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நாம் நமது கல்வி அமைப்பில் மாபெரும் புரட்சி செய்தே ஆக வேண்டும். அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து நிறைவு காண நான் என் உள்ளத்தில் தோன்றிப் பல அரிய கருத்துக்களை இதன்கண் அளித்துள்ளேன்.]

1. மாணவர்கள் அரசியலில் ஈடுபாடு கொள்வதை முழுமையாகத் தவிர்க்க வேண்டும் என அரசியல் தலைவர்கள் முதற்கொண்டு பொதுமக்கள் வரை எல்லோரும் ஒரு மனதாக விரும்புகின்றனர். ஆனால் அரசியல் வாதிகளை, "நீங்கள் மாணவர்களைத் தன்னகத்தே கொண்ட கல்வியமைப்பில் தலையிடாதீர்கள்" எனக் கேட்க எவருமில்லை. **ஆசிரிய, மாணவ, மாணவியர்கள் கட்சிகளுக்குட்பட்ட அரசியலில் தலையிடக்கூடாதது போல் கட்சிகளுக்குட்பட்ட எந்த அரசாங்கமும் கல்வியில் தலையிடக் கூடாது.** இதுவே எனது முதன்மையான கருத்தாகும். எனவே, கட்சிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மாநிலக் கீழ்ச் சட்டசபைகளுக்கோ அல்லது மத்தியப் பாராளுமன்றத்திற்கோ கல்வியினைப்பற்றிய எந்தச் சட்டத்தையும் இயற்றவோ அல்லது எந்தத் திட்டத்தையும், கருத்துக்களையும் வெளியிடவோ, பேசவோ அதிகாரம் அளிக்கப்படக் கூடாது. கல்வி இலாக்கா என ஒன்று மத்திய அல்லது கீழ்ச் சட்டசபைகளில் இருத்தல் கூடாது. கல்வி இலாக்கா மாநிலக் கீழ்ச் சட்டசபைக்கோ அல்லது மத்தியப் பாராளுமன்றத்திற்கோ உட்பட்டதாகவோ அல்லது அவற்றிலுள்ள மந்திரி . சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டதாதவோ இருத்தல் கூடாது. கல்வி இலாக்காவிற்கென ஒவ்வொரு மானிலத்திலும் பல்கலைக் கழகம், உயர்நிலைப் பள்ளி, ஆரம்பப் பள்ளி முதலிய கல்விக் கூடங்களில் பணியாற்றும் **ஆசிரியப் பெருமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சிச் சார்பற்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்று இருத்தல் வேண்டும்.** மாநிலக் கல்விக் குழுவிற்கு அம்மாநிலத்தின் கவர்னரும், மத்தியக் கல்விக் குழுவிற்கு ஜனாதிபதியும் (பெயரளவில்) தலைவர்களாக இருத்தல் வேண்டும்.

2. M.A., M.Sc., பட்டதாரிகள் தற்பொழுது முதற்கண் I.A.S. தேற முயற்சி செய்வது போல் B.A., B.SC. **பட்டதாரிகள் முதற்கண் B.T.யில் வந்து சேர முயற்சி செய்யும் நிலை ஏற்பட வேண்டும்.** அப்பொழுதுதான் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் முதல்தரமான பட்டதாரிகளையும், நன்கு போதிக்கும் ஆற்றல் உடைய பட்டதாரிகளையும் தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியும். இந்நிலை ஏற்பட **ஆசிரியர்களின் அந்தஸ்து** மிகவும் **உயர்த்தப்படல் வேண்டும்.** எனவே அரசாங்க அலுவலகங்களிலோ, தனியார் கம்பெனிகள், மில்கள், தொழிற்சாலைகள் முதலியவைகளிலோ பட்டதாரிகளுக்கு அளிக்கப்படும் ஊதியத்தைக் காட்டிலும் மிக அதிகமாக ஊதியம் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். மேலும் **B.T. பயிற்சிக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு மாதந்தோறும் குறைந்தது 100 ரூபாய் உதவித் தொகை அளிக்கப்படல் வேண்டும்.** இதே போல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கும் குறைந்தது 60 ரூ. உதவித் தொகை அளிக்கப்படல் வேண்டும்.

3. தமிழ் கற்பிப்பதற்கென்று தனி ஆசிரியர்கள் உள்ளது போல் **ஆங்கிலம் கற்பிக்கவும் தனி ஆசிரியர்கள் இருத்தல் வேண்டும்.** கணிதம், விஞ்ஞானம், சரித்திரம், பூகோளம் முதலிய பாடங்களை எடுக்கும் ஆசிரியர்களையே ஆங்கிலமும் நடத்தச் செய்தல் கூடாது.

4. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தற்பொழுது இருப்பது போல் Written Testக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படாமல் **Practical Testக்கு மிக அதிக முக்கியத்துவம் அளிக்கப் படல் வேண்டும்.**

5. பள்ளி ஆசிரியர்களுக்குத் **தாங்கள் நடத்தும் பாடத்தைப் பற்றிய பொது அறிவு மிக அதிகம் இருத்தல் வேண்டும்.** எனவே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, ஒவ்வொரு பயிற்சி பெறும் ஆசிரியர்களும் தாங்கள் எடுத்துக்கொண்ட பாடத்தில் பொது அறிவினை நன்கு வளர்த்துக் கொள்ள ஏற்ற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளல் வேண்டும். (உ - ம்) கணிதத்தைத் தன் விருப்ப பாடமாக எடுத்துக் கொண்டவர்களுக்கு History of Mathematics, History of Mathematicians, Mathematical Quiz, Mathamatical Recreations, Short cuts for Multiplications and division etc. முதலியவைகளை நன்கு தெரிந்திருத்தல் வேண்டும்.

6. வேறு எந்த வேலையிலும் இல்லாத சலுகை ஒன்று ஆசிரியர்களுக்குத் தரப்பட்டுள்ளது அதாவது ஆசிரியர்கள் Private ஆகப் பள்ளியில் வேலை பார்த்துக்கொண்டே அரசாங்க, அல்லது பல்கலைக் கழகத் தேர்வுகள் எழுத வாய்ப்புகள் உள்ளன. இதனால் ஆசிரியர்கள் மாணவர்களின் முன்னேற்றத்தைக் காட்டிலும் தங்கள் முன்னேற்றத்தையே பெரிதாகக் கருதி மாணவர்களுக்காக முழு ஊக்கத்துடனும், முயற்சியுடனும் உழைப்பதிலிருந்து தவறி விடுகின்றனர். எனவே **ஆசிரியர்கள் Private ஆகப்பள்ளியில் வேலை பார்த்துக்கொண்டே தேர்வுகள் எழுதுவது தவிர்க்கப்படல் வேண்டும்.** ஆனால் அதற்குப் பதிலாக ஆசிரியர்களுக்கு அவர்களின் அனுபவத் திற்கேற்ப ஒரு வருடமோ, இரு வருடமோ **அரைச் சம்பளத்துடன் விடுமுறையளித்து ஆசிரியர்கள் படிப்பதற்கெனத் தனியாக ஏற்படுத்தப்படும் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் படியான வாய்ப்பினை ஏற்படுத்துதல் வேண்டும்.**

7. பொதுவாகத் தற்பொழுதுள்ள கணக்குப்படி ஆசிரியர்களுக்குப் 15 வருடங்களுக்குதான் Increment அளிக்கப்படுகிறது. இதனால் ஆசிரியர்கள் 15 வருடங்களில் உச்ச ஊதியத்தை அடை கின்றனர். அவ்வாறு இல்லாமல் அவர்கள் வேலைபார்க்கும் ஒவ்வொரு வருடத்திற்கும் Increment கொடுக்கப்படல் வேண்டும். எனவே **ஆசிரியர்கள் ஊதியத்தில் உச்சவரம்பு இருத்தல் கூடாது.**

8. **ஆசிரியர்கள் காலையிலோ, மாலையிலோ தனியாக Tuitions எடுக்கும் வழக்கம் அறவே நிறுத்தப்பட வேண்டும்.** ஆசிரியர்கள் ஒரு சில மாணவர்களிடம் மட்டும் பணம் பெற்றுக்கொண்டு பாடம் சொல்லிக் கொடுப்பது லஞ்சம் வாங்குவதற்குச் சமமாகும். மேலும் இம்முறையினால் பண வசதியற்ற மாணவர்கள் ஆசிரியர்களை அணுகித் தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள முடிவதில்லை. ஆசிரியர்களும் தங்கள் முழுத் திறமையை வகுப்பறையில் காட்ட முயலுவதில்லை. எந்த ஆசிரியர்களும் எந்தப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்களுக்கும் தனியாகப் பணம் பெற்று Tuition எடுக்கக் கூடாது எனவும், எந்தப் பள்ளி மாணவர்களும் எந்தப் பள்ளி ஆசிரியரிடமும் தனியாக Tuition வைத்துக் கொள்ளக் கூடாது எனவும் சட்டம் பிறப்பிக்கப்பட வேண்டும். இதனை மீறுவோர் ஆசிரியர்களானாலும் சரி, மாணவர்களானாலும் சரி உடனடியாகப் பள்ளியிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

9. **ஆசிரியர்களின் இல்லங்கள் எல்லாம் பள்ளிகளின் அருகில் இருக்கும்படி செய்தல் வேண்டும்.**

10. பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதனால் ஒரே பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களும், படிக்கும் மாணவர்களும் ஒருவரை ஒருவர் அறிந்துக்கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே ஒரு பள்ளியில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை **1000க்கு மேற் படாமல்** இருத்தல் வேண்டும். மேலும் ஒரு வகுப்பறையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை **30க்கு மேற்படாமல்** இருக்க வேண்டும்.

11. நம் மாநிலத்தில் உள்ள பள்ளிகள் எல்லாம் ஒரே நாளில் ஆரம்பித்து (ஜுன் முதல் தேதி) ஒரே நாளில் முடிவடையும்படி (ஏப்ரல் 10) இருத்தல் நல்லது.

12. **பாடங்கள் :** 6, 7, 8ஆம் வகுப்பு மாணவர்கள் படிக்க வேண்டிய பாடங்கள் Tamil English, Mathematics, Science, Social Studies. 9-ம் வகுப்பு மாணவர்கள் படிக்கவேண்டியவை: Tamil, English, IIIrd language (Hindi), Mathematics, Science, Social Studies.

பிரிவு வேளைகள்

13.	Tamil	6	Periods.	[5	For teaching	+ 1	Composition]	
5 நாட்கள் × 8 = 40	English	6	,,	[5	,,	+ 1	,,	]
	Hindi	3	,,	[2	,,	+ 1	,,	]
	General Maths	5	,,	[4	,,	+ 1	Practical	]
	Physical Science	4	,,	[3	,,	+ 1	Practical	]
	Natural Science	3	,,	[2	,,	+ 1	Practica	]
	Geography	3	,,	[2	,,	+ 2	Practical	]
	Advanced Maths. or History & Economics or Home Science or Commerce or Agriculture	5	,,	[4	For teaching	+ 1	Practical	]
	Physical Education	2	,,	27		8		
	Drawing or Music or Weaving or Carpentry or Sewing etc.	2	,,					
	Literary Association	1	Period					
		40	Periods					

மொத்தம் 40 பிரிவு வேளைகளில் 27 பிரிவுகள் ஆசிரியர்கள் பாடம் நடத்த வேண்டியவை. மீதியுள்ள 13 பிரிவு வேளைகளும் மாணவர்கள் தங்கள் திறமை காண்பிக்க வேண்டிய நேரங்கள், எனவே, இவை தற்பொழுது உள்ளதைவிட அதிக ஆர்வத்தையும், மகிழ்ச்சியையும் மாணவர்களுக்கு ஊட்ட வல்லன.

14. நம் மாநில முழுவதும் உள்ள எல்லாப் பள்ளித் தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, முதலிய மொழி ஆசிரியர்கள் ஒரு **வட்டத்திற்குக் கட்டாயமாக எத்தனை கட்டுரைகள்** (Composition) **கொடுக்கப்படவேண்டும் என வரையறை இருத்தல் வேண்டும்.** ஒரு பள்ளியில் 3-ம் மற்றொரு பள்ளியில் 25-ம் என இருத்தல் கூடாது.

தமிழ் :	மொத்த எண்ணிக்கை	25	{ கட்டுரை 9, கடிதம் 4 மொழிப்பயிற்சி 4 திரண்டகருத்து 4 சுருக்கிவரைதல் 4 }
ஆங்கிலம் :	,,	,, 25	{ Essays 6, Letter 6, comprehension 4 Translation 5 precis 4. }
Hindi :	,,	,, 25	{ Essays 6, Letter 4 comprehension 5 Translation 7 precis 3. }

Compositions எல்லாப்பள்ளி ஆசிரியர்களாலும் சரிவரக் கொடுக்கப்பட்டுள்ளனவா என D. E. O. க்களால் ஒவ்வொரு வருட முடிவிலும் சோதிக்கப்படல் வேண்டும்.

15. Practical வகுப்புகளில் மாணவர்கள் தனித்தனியாகத் தங்கள் பாடத் திட்டத்திற்கேற்ப ஆசிரியர்களின் உதவியால் Models, Charts, Album collections of stamps, seeds, eaves, feathers முதலியவைகள் தயார் செய்தல் வேண்டும். மேலும் அவ்வகுப்புகளில் அப் பாடங்களைப் பற்றிய விவாதங்கள், சொற்பொழிவுகள் முதலியனவும் செய்யலாம். ஆசிரியர்கள் Flilm Stripsகளைப் போட்டும் காண்பிக்கலாம். இம்முறைகளினால் மாணவர்களுக்குப் பாடங்களைப் படிப் பதில் ஆர்வம் ஏற்படுவதோடு அவற்றை நன்முறையில் புரிந்து கொள்ளவும் முடியும்.

இவ்வாறு தனித்தனியே மாணவர்களால் தயாரிக்கப்பட்ட Models, Charts, Album, Collections முதலியவைகளை அந்த அந்தப் பாட ஆசிரியர்கள் [மொழி ஆசிரியர்களுக்கு Composition Note Books] வருட முடிவில் D.E.O. வின் மேற்பார்வைக்கு வைத்தல் வேண்டும். இவைகளிலிருந்தே ஆசிரியர்கள் வேலை செய்யும் திறனைக் கல்வி அதிகாரிகள் நிர்ணயித்து விடக்கூடும்.

16. Examination: தற்பொழுது பெரும்பாலோர் தேர்வுமுறை சரியில்லை என்றும், அவற்றினை மாற்றியமைத்தல் வேண்டும் என்றும் கூறுகின்றனர். ஆனால் மாணவர்கள் எண்ணிக்கை அதிகமாகவும், பள்ளிகளில் வசதிகள் குறைவாகவும் உள்ள நம்நாட்டில் தேர்வு முறையில்லாது வேறு முறைகளில் மாணவர்களைத் தரம் பிரிக்க இதுவரை ஒருவரும் நல்வழி காட்டவில்லை.

தேர்வு முறையில் நாம் மாணவர்களைச் சரிவரத் தரம் பிரிக்க முடியாமல் போனதற்குக் காரணம் நாம் தேர்வு முறையைச் சரிவரப் பின்பற்றாமையேயாகும். பள்ளியிறுதி வகுப்பு அரசாங்கத் தேர்வில் ஒவ்வொரு பாடத்திலும் தேர்ச்சிப்பெறக் குறைந்தது 40 மதிப்பெண்கள் எடுக்க வேண்டும் என இருக்கும் இடத்து 1ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரையிலும் நடைபெறும் பள்ளித் தேர்வுகளிலும் மாணவர்கள் ஒவ்வொரு பாடங்களிலும் தேர்ச்சி பெற 40 மதிப் பெண்கள் கட்டாயமாக எடுத்தல் வேண்டும் என இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் ஒரு வகுப்பில் இருக்கும் மாணவன் அவ்வகுப்பிற்கு உரிய தகுதி உடையவனாகிறான். ஆனால் தற்பொழுதோ பெரும்பாலான பள்ளிகளில் 10 மார்க்கு வாங்கிய மாணவர்கள்கூட மேல் வகுப்புகளுக்குச் செல்ல அனுமதியளித்து விடுகின்றனர். இதனால் 11 ஆம் வகுப்பில் இருக்கும் மாணவர் களில் பலர் 8-ம் வகுப்பிற்குக்கூடத் தகுதியில்லாதவர்களாக இருக்கின்றனர். இந்நிலை பெரும்பாலும் நகரப்பகுதிகளைவிடக் கிராமப் பகுதிகளில்தான் அதிகமாக இருந்து வருகின்றது. எனவே நாம் ஒவ் வொரு வகுப்புகளிலும் குறிப்பிட்ட (40%) மார்க்குகள் எடுக்காத மாணவர்களைத் தயவு தாட்சண்யம் தராமல் நிறுத்தி வருவோமேயாகில் 11ஆம் வகுப்பு வந்தடையும் மாணவர்கள் அவ்வகுப்பிற்குரிய தகுதியினை உடையவர்களாக இருப்பார்கள். இதனால் 11ஆம் வகுப்பு மாணவர்கள் அரசாங்கத் தேர்வுக்காகப் பாடங்களைப் புரியாமல் மனப்பாடம் செய்யவேண்டிய நிலை ஏற்படாது. அரசாங்கத் தேர்வில் தேர்ச்சி அடைகின்றவர்களின் சதவீதமும் மிக உயர்ந்த நிலையில் இருக்கும்.

17. பொதுவாக ஆரம்பப் பள்ளிகளிலிருந்து உயர்நிலைப் பள்ளியினை வந்தடையும் மாணவ, மாணவியர்களில் பெரும்பாலோர் 6ஆம் வகுப்பிற்குரிய தகுதியினை உடையவர்களாயிருப்பதில்லை. ஆரம்பப் பள்ளிகளில் ஏதோ மாணவர்களை ஐந்து வருடம் வைத்திருந்து அனுப்பிவிட்டால் போதும். மீதியை மேல் வகுப்பு ஆசிரியர்கள் பார்த்துக் கொள்ளுகிறார்கள் என்னும் எண்ணம்தான் நிலவி வருகிறது. எனவே ஆரம்பப் பள்ளியின் இறுதியாண்டாகிய ஐந்தாம் வகுப்பு முடிவில் ஒரு பொதுத் தேர்வு நடை பெறவேண்டும். மாநிலம் முழுவதும் சேர்த்து ஒன்றாக நடத்துவது கடினமாதலால் ஒவ்வொரு மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு [D.E.O.] உட்பட்ட பகுதிகளில் அந்தந்த D.E.O.க்களின் மேற்பார்வையின் கீழ் தேர்வுகள் நடைபெறவேண்டும். அப்பொழுதுதான் ஆரம்பப் பள்ளிகளிடையே போட்டி மனப்பான்மை ஏற்பட்டு நல்ல பலன் காணமுடியும்.

18. தற்பொழுது பள்ளியிறுதி வகுப்பு அரசாங்கத் தேர்வில் தோல்வியுறும் மாணவ, மாணவியர்களில் பெரும்பாலோர் ஆங்கிலத்திலேயே தோல்வியுறுகின்றனர். ஆங்கிலம் நம்

நாட்டு மொழியல்ல. அது ஒரு அந்நிய நாட்டு மொழி. உலகப் பொது மொழி. நம்நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் ஆங்கிலத்தில் எழுத, பேசத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்பது அவசிய மில்லை. நம் மாகாணத்தில் எல்லாச் சிறுவர் சிறுமியர்களும் கட்டாயமாகப் பள்ளிகளுக்குச் செல்ல வேண்டும் என இருப்பதால் அச்சிறுவர்களில் ஒரு பகுதியினர் மட்டும் ஆங்கிலத்தை எழுதவும் பேசவும் தெரிந்து கொண்டால் போதுமானது. பிறருக்கு அதைப் படிக்கவும், பிறர் பேசுவதைப் புரிந்துகொள்ளும் ஆற்றலும் இருந்தால் போதுமானது. எனவே ஆங்கிலத்தைத் தற்பொழுது உள்ளது போல் 3ஆம் வகுப்பில் இருந்து கற்பிக்க வேண்டும். ஆனால் அரசாங்கத் தேர்வில் (XI Standard) வெற்றி பெற அதில் குறைந்தது 40 மதிப்பெண்கள் எடுக்க வேண்டும் என இருத்தல் அவசியமில்லை. எல்லோரும் கட்டாயமாக ஆங்கிலத்தேர்வு எழுதத்தான் வேண்டும். **ஆங்கிலத்தில் 50 மதிப்பெண் களுக்குமேல் எடுத்தவர்கள் மட்டும் விரும்பினால் கல்லூரிகளில் English Mediuத் திலும் ஏனையோர் கல்லூரிகளில் தமிழ் Mediuத்திலும் சேர்ந்து படிப்பதற்கான வசதிகள் இருத்தல் வேண்டும்.** இல்லையேல் ஆங்கிலத்துடன் தாய்மொழியல்லாத வேறொரு இந்திய மொழியினைச் சேர்த்து (Third Language Hindi) **இரண்டிலுமாக 200 மதிப்பெண் களுக்குக் குறைந்தது 60 மதிப்பெண்கள் எடுக்கப்படல் வேண்டும் என இருத்தல் வேண்டும்.**

19. தற்பொழுது 11ஆம் வகுப்பு அரசாங்கத் தேர்வில் கணிதம், விஞ்ஞானம், சமூகம் ஆகிய மூன்று பாடங்களிலும் சேர்த்து மதிப்பெண் 100 எடுக்கவேண்டும் எனவும் ஒவ்வொன்றிலும் 25க்கு குறையாமலும் இருக்கவேண்டும் எனவும் இருப்பதுபோல் இல்லாமல் General Mathematics, Physical Science, Natural Science, Geography, Advanced Mathematics or History & Economics etc. ஆகிய **ஒவ்வொரு பாடங்களிலும் குறைந்தது 40 மதிப்பெண்கள் எடுக்கப்பட வேண்டும் என இருத்தல் வேண்டும்.** அடுத்து **அரசாங்கத் தேர்வில் தோல்வியுறும் மாணவர்கள் தோல்வியுற்ற பாடங்களை மட்டும் மறுமுறை எழுதினால் போதும் என்றும் இருத்தல் வேண்டும்.**

20. வகுப்பறைகளிலும் பள்ளிக்கூடத்தைச் சார்ந்த இடங்களிலும் மாணவர்கள் தரக் குறைவாக நடந்து கொள்ளுதல், ஆசிரியர்களிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொள்ளுதல், ஆசிரியர்கள் பாடம் நடத்தும்பொழுது பேசுதல், இடையூறுகள் விளைவித்தல், வகுப்பறையில் தூங்குதல், வீட்டு வேலைகளைச் (Home Work) சரிவரச் செய்துகொண்டு வராமல் இருத்தல், ஒவ்வொரு நாளும் படிக்கவேண்டிய பாடங்களைச் சரிவரப் படிக்காமல் வருதல், சில பிரிவு வேளைகளில் வகுப்பு களுக்கு வராமல் இருத்தல் போன்ற **தவறுகளை மாணவ, மாணவிகள் செய்யும்பொழுது அவற்றை உடனடியாகப் பதிவுசெய்து கொள்ளுவதற்கென ஒவ்வொரு ஆசிரியர் களிடமும்** [அல்லது ஒவ்வொரு வகுப்புக்களிலும்] **தனி நோட்டு இருத்தல் வேண்டும்.** ஒவ்வொரு நாளும் மாணவர்கள் செய்யும் தவறுகளை அவர்களின் பெயர்களுக்கெதிரே குறித்து வைத்துக்கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு மாத இறுதியிலும் அந்த நோட்டுகளைப் பரிசீலனை செய்ய அம்மாதங்களில் மாணவர்கள் செய்த தவறுகளுக்கேற்ப அவர்களுக்குத் தண்டனைகள் விதித்தல் வேண்டும். தண்டனைகள்: 1. மாணவர்களைப் பள்ளிக்கு வரக்கூடாது எனச் சில நாட்கள் நிறுத்தி வைத்தல் 2. பள்ளியிலுள்ள மாணவர்கள் எல்லோரும் குழுமியிருக்கும் சபையின் முன் மாணவர்களை தலைமையாசிரியர் அடித்தல் 3. Fine கட்டும்படி செய்தல் 4. தோட்டத்திற்கும், வகுபபறை களுக்கும் தண்ணீர் எடுத்து ஊற்றும்படி செய்தல், 5. விளையாடும் இடத்தைச் சுத்தப்படுத்தச் செய்தல், 6. வகுப்பறையைச் சுத்தம் செய்தல்.

மாணவர்கள் செய்யும் தவறுகளை ஆசிரியர்கள் உடனடியாகக் குறித்துக் கொள்ளுவதனால் மாணவர்களுக்கு ஆசிரியர்களிடம் ஒருவிதப் பயமும், மரியாதையும் ஏற்படுவதுடன் தங்கள் பாடங்களை ஒழுங்காக படிப்பதிலும் அதிக ஆர்வம் காட்ட முயலுவார்கள்.

கல்வி எதிரொலி
(EDUCATION ECHO)

தமிழாக்கம்: **ஆ. குப்புசாமி**

ஆசிரியத் தொழில் தொடர்பான அமைப்புக்களின் உலகக் கூட்டிணைப்பு (World Confederation of Organizations of the Teaching Profession)

பொது அளவியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

பீடிகை:

உலகில் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும், அதன் நாடு, இனம், சமயம், நிறம், பால், பெற்றோர்களிடன் அரசியற் கொள்கைகள், எதிர்பாராத விதத்தில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகள் முதலியவற்றைப் பொருட்படுத்தாமல், கல்வியின் மூலம் சமவாய்ப்புத் தரப்படுதல் வேண்டும். மிகச்சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், ஒவ்வொரு குழந்தையும், தன்னிடம் முடங்கியுள்ள எல்லாத் திறமைகளையும் முழு அளவிற்கு வளர்த்துக் கொள்ள வேண்டும். இதுவே 'கல்வியின் மூலம் சமவாய்ப்பு' என்பதன் பொருளாகும்.

'கல்வியின் மூலம் சமவாய்ப்பு' என்ற கோரிக்கை, ஒழுக்கம், அரசியல், பொருளாதாரம் ஆகிய அடிப்படையின் மேல் எழுந்துளதாகும்.

தன்னிடமிருந்து வேறொருவருக்கு மாற்ற முடியாத உரிமைகளை மனிதர்களிடமிருந்து கவர்ந்து கொள்ளக் கூடாது. இத்தன்மை வாய்ந்த உரிமைகளில் ஒன்று தான் மனிதன் தன் திறமைகளை முழு அளவிற்கு வளர்த்துக் கொள்ளும் வாய்ப்புத்தரும் உரிமையாகும். இஃதே ஒழுக்க ஆய்வாகும்.

சனநாயக நாடுகளில் திடமிக்க தேசிய, பன்னாட்டுக் கொள்கைகளை உருவாக்கிச் செயற்படுத்தும் அளவுக்கு ஒவ்வொரு குடிமகனும் அறிவுடையவனாய் இருத்தல் வேண்டும். இஃதே அரசியல் ஆய்வாம்.

தன்னாட்டில் வாழும் மக்களின் திறமைகளை எந்நாடு முழு அளவிற்குப் பயன்படுத்திக் கொள்ளத் தவறுகிறதோ அந்நாடு பொருளாதாரத் துறையில் முழு வளர்ச்சி பெறாது. இதுவே பொருளாதார ஆய்வாம். ஐக்கிய நாட்டுச் சேய்களின் நிதி, (United Nations Children's Fund) முன்னேறும் நாடுகளின் சேய்கள் (Children of the Developing Countries) என்ற தனதறிக்கையில், பொருளாதாரத் துறையில் முன்னேறியுள்ள நாடுகளில், நற்கல்வி தனிப்பட்டவர்களுக்கும், சமுதாயத்திற்கும் நல்லதோர் ஊதியத்தை நல்குகியது என்றும், முன்னேறும் நாடுகளில் கல்விக்காக எவ்வளவு பணம் முதலீடு செய்யப்படுகிறதோ அதற்கு மேல் ஊதியம் இருக்கும் என்றும் கூறுகிறது.

கல்வியின் மூலம் சம வாய்ப்பு என்பது இன்னும் அடைய வேண்டிய குறிக்கோளாகவே யுள்ளது. தற்போது ஒரு நாட்டிற்கும், மற்றொரு நாட்டிற்கும், ஒரு நாட்டின் உள்ளேயும் வேறுபாடுகள் உள்ளன. பொருளாதாரத் துறையில் முன்னேறியுள்ள நாடுகளுக்கும், அத்துறையில் முன்னேறும் நாடுகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் நன்கு தெரிகின்றன. சமுதாய, பொருளாதார, சரித்திர, பூகோளச் சூழ்நிலைகளாலும், குழந்தையின் உடல், உளத் திறமைகளாலும், நாடு, இனம், சமயம், நிறம், பால், செல்வம் அல்லது சமுதாயத்தின் நிலைமை, பெற்றோர்களின் அரசியற் கொள்கைகள், எதிர்பாரா விதத்தில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகள் ஆகிய காரணங்களாலும் ஒரு நாட்டிற்குள் வேறுபாடுகள் தோன்றுகின்றன.

தீர்மானம் :

வெவ்வேறு நாடுகளில், கல்வியின் வெவ்வேறு நிலைகளில் ஏற்படும் முன்னேற்றத்தையும், அறிவு, உடல், உணர்ச்சி, நேர்மை, செயல்முறைத் திறமைகள் ஆகிய துறைகளில் ஒவ்வொரு குழந்தையும் முழு வளர்ச்சி பெறுவதற்குச் சம வாய்ப்புக்கள் தரப்படல் வேண்டும் என்பதையும் கருத்திற் கொண்டு, இம்மாநாடு ஒவ்வொரு நாட்டின் அரசையும், கல்வி வளர்ச்சிக்குத் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலொன்றை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறது. ஆசிரிய அமைப்புக்கள் கீழ்க் காணும் வேண்டுகோள்கள் செயற்படுத்தப்படுகின்றனவா என்று பார்க்கச் செயலில் இறங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

1. நாடு, இனம், நிறம், பால், சமயம், செல்வம் அல்லது சமுதாயத்தில் நிலைமை, பெற்றோர் களின் அரசியற் கொள்கைகள், எதிர்பாரா விதத்தில் ஏற்படும் சூழ்நிலைகள் ஆகிய காரணங்களால், கல்வித்துறையில் வேற்றுமை காட்டலாகாது.

2. எல்லா நிலைகளிலும் கல்வி இலவசமாக வழங்கப்படல் வேண்டும்.

3. கட்டாயக் கல்வித் திட்டம் குழந்தைகள் எச்சிறு வயதில் கற்க முடியுமோ அச்சிறு வயதிலேயே தொடங்க வேண்டும். அத்திட்டத்தை எவ்வளவு காலத்திற்கு நீடிக்க முடியுமோ அவ்வளவு காலத்திற்கு நீடிக்க வேண்டும்.

4. பெண்களுக்குச் சமவாய்ப்புத்தரும் சமுதாயத் தடைகளையும், பிற தடைகளையும் நீக்கு வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5. எல்லாப் பள்ளிகளிலும் சீர்மிக்க, போதுமான அளவு வாய்ந்த, பணியாளர்த் தொகுதியும், இட வசதியும், கல்வித்துணைப் பொருள்களும் இருத்தல் வேண்டும்.

6. தனிப்பட்டோர் சரிசம கல்வி வாய்ப்புக்களைத் துய்த்தற்கு பண உதவியும், பிற உதவியும் தரப்படல் வேண்டும்.

7. எல்லைக்குட் பட்ட அல்லது வறிய சூழ்நிலைகளிலிருந்து வரும் குழந்தைகளுக்கு, மேலும் பல வாய்ப்புக்களோடு கூடிய முற்பள்ளி (Pre-School) வாய்ப்பினை ஏற்படுத்தித் தரல் வேண்டும்.

8. கட்டாய மருத்துவப் பரிசோதனையின் மூலம், குழந்தைகள் பள்ளியில் படிக்கும் போதும், முன்பும் அவர்களுடைய மருத்துவர் குறைகளை மிக விரைவில் அறிந்து, அவற்றிற் கேற்ற சிகிச்சை அளிக்கப்படல் வேண்டும். உள்ளூர், தேசிய, பன்னாட்டு உடல் நலச் செயலாண்மை நிலையங்கள் (Health Agencies) யாவும் ஒரு முகப்படுத்தப்படல் வேண்டும்.

9. (i) அடிப்படை உடல்நல, துப்புரவுச் சாதனங்களை பள்ளிகளில் அமைத்தல், (ii) பாடத் திட்டத்தால் உடல்நலக் கல்வியைச் சேர்த்தல், (iii) குழந்தைகளின் உணவிலுள்ள குறைபாடுகளை நீக்க நடவடிக்கைகள் எடுத்தல், (iv) பொது உடல் நல நடவடிக்கைகளை விரிவுபடுத்தல், ஆகிய வற்றின் மூலம் குழந்தைகளின் உடல்நலத்தைப் பாதுகாக்கப் பலவாகத் திட்டங்களை உள்ளடக்கை திட்டத்தை மேற்கொள்ளல்.

10. உடற் குறையும், மூளைக் கோளாறும் உடைய குழந்தைகளுக்குக் கல்வி, மருத்துவ வசதிகள் தனிப்பட்ட முறையிலும், போதுமான அளவிலும் செய்து தரப்படல் வேண்டும்.

11. பள்ளியில் சொல்லிக் கொடுக்கும் திறமைகளைத் தவிர வேறு திறமைகளையும் குழந்தை களுக்குக் கற்பிக்கும் விதத்தில், பாடத்திட்டம் அமைந்திருக்க வேண்டும். அத்திட்டம் குழந்தை களின் உள்ளத்தில் நற்றன்மையையும், முதன்மைப் பண்பையும் வளர்த்துவிடக் கூடியதாய்த் திகழ வேண்டும்.

12. தனி மாணவர்களின் தனித் திறமைகள் இவை என்று தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களின் அறிவுத் திறனையும், படைப்புத் திறனையும் முழு அளவிற்கு வளர்த்துவிட வசதிகள் செய்துதர வேண்டும்.

13. உலகின் பல பாகங்களிலுள்ள அறியாமை, கல்வியின் மூலம் சரிசம வாய்ப்பு (Equa, Opportunity Through Education) என்னும் நோக்கம் நிறைவேறுதபடி முட்டுக் கட்டையாக உள்ளது. அவ்வறியாமையை அகற்றுதற்குத் உறுதி மிக்க ஆழ்ந்த கல்வித் திட்டமொன்று மேற் கொள்ளப்படல் வேண்டும். முதியோர் கல்வி வழங்குவதற்கான வசதிகள் செய்து தரப்படல் வேண்டும். பெற்றோர்களைத் தங்கள் குழந்தைகளுக்கு வழங்கும் கல்வியின் முக்கியத்துவத்தை உணரச் செய்தல் வேண்டும்.

14. ஒவ்வொரு நாட்டின் கல்வித்துறை முன்னேற்றம் அந்நாட்டின் வளங்களைப் பெருக்கு வதைப் பொருத்துள்ளது. ஆகையால், தொழிற் கல்வியின் மீது தனிக்கவனம் செலுத்தப்படல் வேண்டும். தொழிற் கல்வியின் மதிப்பும், மற்றவகைக் கல்வியின் மதிப்பும், ஒன்றேதான் என்பதை மாணவர்களும், பெற்றோர்களும் உணரும்படி செய்தல் வேண்டும்.

15. கல்வித்துறை அனுபவங்களையும், அறிவையும் ஒரு நாடும் ஒரு நாடும் பரிமாறிக் கொள் வதற்குக் கல்வியதிகாரிகளும், ஆசிரிய அமைப்புக்களும் பொறுப்பேற்க வேண்டும். இத்தகைய மாற்றம் மாணவர்களின் தனித் திறமைகளை வளர்த்தற்கும், உடற்குறையும், மூளைக்கோளாறும் உள்ள குழந்தை களை முன்னேற்றுவதற்கும் மிகவும் சிறப்பாகப் பயன்படும்.

16. I. கல்வியின் ஒவ்வொரு நிலையிலும், ஏற்ற கல்வியும், உயர் கல்வியும், பயிற்சியும் தகுதியும் பெற்ற ஆசிரியர்கள் இருந்தாலொழிய சரிசமக் கல்வி வாய்ப்பினை அடைதல் என்பது இயலாது. ஆதலால், கல்வியதிகாரிகளிகள் ஆசிரியப் பயிற்சித் திட்டங்களும் (பணிபுரியும் ஆசிரி யர்கள் உட்பட) தனித்தனிக் கட்டுப்பாடுகளும், (Working Conditions) நல்ல ஊதியமும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தனித்தனிக் கட்டுப்பாடுகள் போன்றவை சமுதாயத்தில் ஆசிரியத் தொழிலின் மதிப்பை உயர்த்தும்.

II. இந்தச் சந்தர்ப்பத்தில், இப்பேரவை முன்னர்க்கூடிய பேரவைகள் செய்த பரிந் துரையைத் (Recommendation) திரும்பக் கூறுகிறது. பன்னாட்டு அரசுகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட, ஆசிரியத் தொழில் மதிப்புத் தொடர்பான பன்னாட்டளவு கருவி ஒன்றினைப் பெற 'விக்டாப்' எல்லா முயற்சிகளும் செய்யவேண்டும் என்று இபபேரவை கேட்டுக் கொள்கிறது.

இளங் குழந்தைகளுக்குக் கல்வியறிவூட்டக் குறைந்த தகுதியுள்ள ஆசிரியர்கள் போதும் எனச் சொல்லும் யோசனை தவறுனதாகும். கல்வியின் எல்லா நிலைகளின் முக்கியத்துவத்தையும் நாங்கள் உறுதியாக வலியுறுத்துகிறோம்.

III. கல்வியின் மூலம் சரிசம வாய்ப்பினை எதிர்காலத்திற்குள் எய்த முடியும், ஆதலால் உறுப்பினராயுள்ள அமைப்புக்களின் முன் இப்பொருளினை வைத்து, அதன் விளைவாய் ஏற்படும் முன் னேற்றத்தை அப்போதைக்கப்போது மதிப்பிட "விக்டாப்" கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வறிக்கையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும், அவர்கள் சார்ந்துள்ள அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப படுகின்றனர்.

IV. இப்பெரும்பணியின் பெருமையினையும், விரைவினையும் கருத்திற்கொண்டு, இப் பேரவை கீழ்க்கண்டவற்றைப் பரிந்துரைக்கிறது.

(a) மேற்கூறிய பரிந்துரையைச் செயற்படுத்த நிதியுதவியுட்பட இன்றியமையா நடவடிக்கைகளை எல்லா அரசுகளும் மேற்கொள்ள வேண்டும்.

(b) தேசீய அரசுகளுக்கு நிதி, அறிவுரை, வழிகாட்டல் முதலியன கிடைக்கும்படி பன்னாட்டமைப்புக்கள் (Inter Governmental Organization) துணைபுரிய வேண்டும். இப்படிச் செய்வதால், உலகிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும், மிகக் குறுகிய காலத்தில், கல்வியின் மூலம் சரிசம வாய்ப்புக் கிட்டும்படி செய்யலாம்.

V. பதினான்காவது பேராள் கூட்டம் (XIVth Assembly of Delegates) ஆடிஸ் அபாபாவில் வெற்றிகரமாக நடப்பதற்குத்துணை புரிந்த எல்லோருக்கும்—குறிப்பாகக் கீழ்க்கண்டவர்களுக்கு இப்பேரவை தன் பாராட்டுதலை முழுமனத்துடன் தெரிவித்துக் கொள்கிறது.

(A) மேன்மைதங்கிய எத்யோப்பிய பேரரசர் முதலாம் ஹலிசலாசி அவர்கள் பதினான்காம் பேராள் கூட்டத்திற்கு வாழ்த்துச் செய்தி யொன்று அனுப்பியிருந்தார்.

மேன்மை தங்கிய, குடிக்குல இளவரசர் ஜுபிலி மாளிகையில் (Jubilee Palace) கூட்டத்திற்கு வந்திருந்த பேராட்களுக்கு வரவேற்பளித்தார்.

கல்வியமைச்சர் H.E. ஆட்டோ கெப்ரி மெஸ்ருகல் கிப்லி எக்சி மாநாட்டில் உரை நிகழ்த்தினர்; மாநாடு நடக்க உதவியும் செய்தார்.

உதவிக் கல்வியமைச்சர் டாக்டர் மெங்கீஷாவும், கல்வியமைச்சரகமும் (Ministry of Education) மாநாடு நடப்பதில் ஆர்வம் காட்டினர்; ஒத்துழைப்புத் தந்தனர்; மிக்க கருணையுடன் இன்பப் பயணம் செல்வதற்கும், கேளிக்கைகளுக்கும் ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

எதியோப்பிய ஆசிரியச் சங்கத்தின் தலைவரும், (President of the Ethiopian Teacher's Association) அச்சங்கத்தின் உறுப்பினர் அனைவரும் பதினான்காவது பேராள் கூட்டத்தை ஆடிஸ் அபாபாவில் நடத்துவதற்கு அன்பழைப்பு அனுப்பியிருந்தனர்; மாநாடு நடத்தற்கான ஏற்பாடுகள் செய்ய உதவிபுரிந்தனர்; மாநாட்டில் பங்கு கொண்டோர் மீதெல்லாம் அன்பு மழையைப் பொழிந்தனர்

பொதுவாக ஆப்பிரிக்காக்கூட நிருவாகத்தினரும் (The Administration of Africa Hall) சிறப்பாக மேஜர் ஆசியாவும் அவரது வணிகத் தொகுதியினரும் (Major Aseefa and his Staff) நற்பணிகள் புரிந்தனர்; வசதிகள் செய்து தந்தனர்.

எதியோப்பியச் சுற்றுலா அமைப்பும், (The Ethiopia Tourist Organisation எதியோப்பியல் பத்திரிகைகளும், வெளிநாட்டுப் பத்திரிகைகளும் வானொலியும் ஒத்துழைப்புத் தந்தன.

(B) சர். ரோனால்ட் கோல்ட் அவர்கள் ஊக்கமூட்டும் தலைமையுரை நிகழ்த்தினர்; பேரவையின் ஆழ்ந்த ஆராய்ச்சிகளைத் திறமையுடன் நடத்திச் சென்றார்.

ஆசிரியத் தொழில் தொடர்பான அமைப்புக்களின் நலனில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட வில்லியம் G. கார் அவர்கள் 1966-ஆம் ஆண்டுக்கான பொருள்பற்றிய பொருத்தமான முன்னுரை யொன்று வழங்கினுர்.

கல்விக்குச் சரிசமவாய்ப்பு (Equal Opportunity for Education) என்பது தொடர்பான வினத்தொகுதிக்கு 'விக்டாப்பில்' அங்கம் வகிக்கும் சங்கங்கள் தந்திருந்த விடைகளை மதிப்பிடற் குரிய விதத்தில், திருவாளர் E. ஸ்டீன் பெர்ஜன் தொகுத்து அளித்தார்.

திருவாளர் A. W. S. ஹட்சிங்ஸ் இவ்விரண்டுப் பொருள் பற்றிய முன்னுரை வழங்கினுர். அம்முன்னுரை அப்பொருள்பற்றிய உயர்தர உரையாடலைத் துவக்கிவைக்கும் சூழ்நிலையை உருவாக்கி யது. உரையாடல் குழுக்களின் தலைவர்களும், பாராட்டுதலுக்கும் நன்றிக்கும் உரியவர்களா வார்கள்.

விக்டாப்பின் துணைத்தலைவர் (Vice-President WCOTP) உயர்திரு நடராசன் அவர்கள் தீர்மானங்கள் கொண்டுவரும் குழுவின் திறமைமிக்க தலைவராகத் திகழ்ந்தார்.

(C) திருவாளர் ஜான் M. தாம்ப்சனும், 'விக்டாப்' செயலகத்தைச் சேர்ந்தவர்களும், குறிப்பாக ஆப்ரிக்கக் கல்விச் செய்திகளைக் கவனிக்கும் 'விக்டாப்' துட்டரை அலுவலகத்தின் இயக்குதரான திருவாளர் E. பென்னட் காலே அவர்களும், (Director of the WCOTP Regional Office for the Africa) ஆடிஸ் அலாபாவில், பதினுன்காவது பேராள் கூட்டம் நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தனர்; ஆண்டு முழுவதும் 'விக்டாபின்' நன்மைக்காகவும். மேன்மைக் காகவும் உழைப்பதில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ளனர்.

மொழிபெயர்ப்பாளர்களும், தொழில் நுணுக்க வல்லுனர்களும், மாநாட்டுப் பணித்தொகுதி யினரும் (Conference Staff) எம்முடன் ஒத்துழைக்காதிருந்தால் மாநாடு வெற்றிகரமாக முடிந்திருக் காது.

கல்வியின் மூலம் சரிசம வாய்ப்பு
(Equal Opportunity Through Education)

தலைமையுரையின் தலைமைக் கருத்துக்கள்

(ஆடிஸ் அபாபாவின் பதினுன்காம் பேராள் கூட்டத்தில் சர் ரோனல்ட் கோல்ட் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.)

"அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக விளங்கிய தியோடோர் ரூஸ்வெல்ட் அவர்கள் தமது கட்டுப்பாட்டிற்கு அடங்காத மாநிலத்தைப் பார்த்து மிக்க சீற்றத்துடன், "அதனை அடக்குதல் பாகினைச் சுவரில் ஆணி கொண்டடிக்க முயல்வதற்கு ஒப்பிடலாம்" என்று கூறினுர். பாகினை எவ்வாறு சுவரில் ஆணியால் அறைந்து நிறுத்த முடியாதோ அதுபோலவே சரிநிகர் (Equality) எனும் சொல்லின் பொருளையும் சரியாக, தெளிவாக எடுத்துக் கூறுதற்கியலாது.

நேர்மைக்குப் புறம்பான ஏற்றத் தாழ்வுகளை (Inequalities) நீக்குவதே நாகரிக வளர்ச்சியின் அறிகுறி எனலாம். ஆனால் நாம் ஒரே விதமான உணவை உண்ணவேண்டும் என்றும், ஒரே விதமான ஆடை அணியவேண்டும் என்றும், ஒரே சீராகக் கட்டப்பட்ட வீடுகளில் வாழவேண்டும் என்றும், ஒரே விதமான பணி புரியவேண்டும் என்றும், ஒரே விதமான இன்பம் துய்க்கவேண்டும் என்றும், ஒரே விதமான ஊதியம் பெறவேண்டும் என்றும் விரும்புவது கிடையாது.

சட்டத்தின் முன்பு எல்லோரும் சமம். கருத்துச் சுதந்திரம் அனைவர்க்கும் உண்டு. அவரவர் விருப்பப்படி கடவுளைத் தொழும் சுதந்திரமும் உண்டு. தன்னாட்டு அரசியலில் ஒவ்வொரு மனிதனும் பங்குகொள்ளச் சரிசம உரிமையுண்டு. இவை யாவும் மனிதர்களைச் சில விதத்தில் சரிசமானமானவர் களாக்குகின்றன.

உண்மையில் ஒரு நாடு சுதந்தர நாடாக இருக்க வேண்டும் என்றால், குடியாட்சி வாழும் நாடாக இலங்க வேண்டும் என்றால், செல்வம் கொழிக்கும் நாடாகத் திகழவேண்டும் என்றால் அது, அந்நாட்டு மக்கள் அரசியல் அதிகாரங்களைப் பெறுவதற்கும், தொழில், வாணிபத் துறைகளில் செல்வாக்கு மிக்க பதவிகளை அடைவதற்கும் சரிசம வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரவேண்டும். அரசியலில் எல்லா மக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை எவ்வாறு சரிசமமாக வழங்கப்பட்டிருக் கிறதோ அவ்வாறே கல்வியிலும் சரிசம வாய்ப்புக்கள் எல்லோருக்கும், எவ்வித வேற்றுமையும் கருதாமல் அமைக்கப்படல் வேண்டும்.

நாம் சரிசம வாய்ப்புக்கள் எதற்குக் கேட்கிறோம்? ஒரே வழியில் மேம்படவா? இல்லை பல வழிகளில் மேன்மையுற.

"அளவு, தரத்தைப் பாழ்படுத்தி விடும்.'

"வேறுபாடின்றி அனைவர்க்கும் வழங்கும் கல்வி தகுதிக்கு மதிப்பளிக்காத கல்வி, சரிசம வாய்ப்பு, மேம்பாட்டினைச் சிதைத்திடும்" என்றெல்லாம் குறை கூறுவோரும் உள்ளனர்.

ஒரு சிலருக்கே கல்வி வழங்குதல் எளிது என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் எல்லோ ரையும் கல்வியறிவு மிக்கவராக்குதல் கடினம் என்றாலும், முடியும் என்கிறேன்.

உள்ளத்தாலேயே உய்த்துணரக்கூடிய கருத்துக்களைப் புரிந்து கொள்ளும் திறனுடையவராய்ச் சிலர் பிறக்கின்றனர். சிலர் சுறுசுறுப்பு மிக்கவராகவும், ஆள்வினையுடையவராகவும், பிறக்கின்றனர்; ஆனால் சிலர் மந்த மதியினராகவும், சோம்பல் மிக்கவராகவும் உள்ளனர். சிலர் இசையறிவு மிக்கவர் களாய்ப் பிறக்கின்றனர்; ஆனால், அவ்வறிவு மற்றவர்களிடம் இருப்பதில்லை. ஆதலால், ஆசிரியர் களாலும், சமுதாயத்தாலும் மரபு நிலமையைக் கட்டுப்படுத்த முடியாது. சமுதாயம் கிறுக்குப்பிடித்த சமுதாயமாக இருக்குமானால், இவன் இவளைத்தான் திருமணம் புரிந்துகொள்ள வேண்டும் என்றும், இவள் இவனைத் திருமணம் புரிந்துகொள்ளக் கூடாது என்றும் ஆணை பிறப்பிக்கலாம். அப்படி ஆணை பிறப்பித்தாலும், பிறக்கும் குழந்தைகள் தரமிக்க குழந்தைகளாகப் பிறக்கும் என்று உறுதியாகக் கூறமுடியாது. ஏனெனில் இவ்வாறு செயல்களின் விளைவுகளுக்கு இயற்கை உத்தரவாதம் அளிப்பது கிடையாது. இதிலிருந்து, பிறக்கும் குழந்தைகள் சரிசமமானவையல்ல என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

பிறப்பிலேயே அமைந்த ஏற்றத்தாழ்வுகளைப் போக்குதற்கு நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. சூழ்நிலையால் வரும் ஏற்றத் தாழ்வுகள் மனிதனால் உண்டாக்கப்பட்டவையாம். ஆதலால் அவற்றை அவனால் குறைக்கவும், அழிக்கவும் முடியும்.

சூழ்நிலைமிகச் சிறந்ததாக இருந்தாலும், எல்லோரையும் ஷேக்ஸ்பியர்களாகவோ, பார்டேக்னராகவோ மாற்றிவிட முடியாது; எனினும், ஆசிரியர்களாகிய நாம் குழந்தைகளின் சூழ்நிலைகளை (வீட்டுச் சூழ்நிலை, பள்ளிச் சூழ்நிலை போன்றவை) நல்ல சூழ்நிலைகளாக மாற்றித் திருத்தி அமைக்கும் பணியில் ஈடுபட்டால், சரிசமக் கல்வி வாய்ப்புக்களைக் குழந்தைகளுக்கு ஏற்படுத்தித் தந்தவராவோம்.

நல்ல பள்ளிகள், பள்ளியிற் பயிலும் குழந்தைகள் எல்லாம் வெவ்வேறு தன்மையர் என்பதையும், அவர்களை ஒரே தன்மையராக்க முயலுதல் தவறாகும் என்பதையும் ஒப்புக்கொள்ளும். குழந்தைகளின் அவாக்கள் வெவ்வேறாகும் என்ற கருத்தையும் அவை ஏற்கின்றன. ஆதலால், அவை ஒரே வகையான சிறப்புமிக்க கல்வி வழங்காமல், பலவகையிலும் சிறப்புமிக்க கல்வியைப் கற்பிக்கின்றன. அவை மிகச்சிறந்த இயக்கநூல் வல்லுநரையும், (Physicist) கலைஞரையும், இசை வல்லுநரையும், தச்சரையும் (இப்படியே எல்லையின்றிச் சொல்லிக்கொண்டே போகலாம்) உற்பத்தி செய்கின்றன. உண்மை. நன்மை, எழில், சுதந்தரம், மரியாதை, பொறுப்பும் போன்ற உயர்பண்புகளின் இருப்பிடங்களாக அவை விளங்குகின்றன.

"ஒரு நல்ல தாய் நூறு பள்ளி ஆசிரியர்களுக்குச் சமமானவள்" (A good mother is worth a hundred school masters) என்றார் ஜார்ஜ்ஹெர்பெர்ட். இது மிகையுரை (Exaggeration) யாகலாம். எனினும் பெற்றோர்கள் ஆசிரியர்களுடன் ஒத்துழைப்பது குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திற்கு உத்தரவாதமளிப்பதாகும். கல்வித்துறையில் ஏற்றதாழ்வுகளை, உண்மையில், ஒழிக்கவேண்டும் என்று விரும்பினால் பெற்றோர்-ஆசிரிய ஒத்துழைப்பினை வளர்த்துவிடல் வேண்டும்.

இக்குழந்தை ஆமை வேகத்தில் முன்னேறும் குழந்தை என்று ஒதுக்கி வைத்துவிடாதீர்கள். அச்சேய் மந்த மதியடைந்தது. கைவிடப்பட வேண்டியது என்று முத்திரை குத்தி விடாதீர்கள். மிகமிக முடியாத குழந்தையும், தனக்கோர் இடம் சமுதாயத்தில் உண்டென்றும் அதனால், சமுதாய நன்மைக்குச் சிலபல செயல்கள் செய்ய முடியும் என்றும் நம்பும்படிச் செய்தல் வேண்டும். நாம் அக் குழந்தையிடமிருந்து நிறைய செயல்களை எதிர்பார்க்கிறோம் என்றும், எவனால் அச் செயல்களைச் செய்து முடிக்கும் திறமை உண்டென்றும், அச் செயல்களின் விளைவுகள் வியக்கத்தக்கனவாய் இருக்கும் என்றும் அவனிடம் நீர் சொல்வீராக. பல ஆண்டுகளாக, இங்கிலாந்தில் பதினொரு வயதினைத் தாண்டிய குழந்தைகள் கல்விக் கழகக் கல்வி பயிலத் தேர்வு முறை வைத்துத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அக்கல்வி பெறத் தகுதியில்லாதவர்கள் என்று ஒதுக்கப்பட்டவர்கள் பிற்காலத்தில் அறிவியல் அறிஞர்களாகவும், மருத்துவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும் ஆனார்கள். "இப் பின்தங்கிய குழந்தையை வைத்துக்கொண்டு என்ன செய்வது?" என்ற கேள்வியைப் பள்ளிக் கூடம் கேட்க வேண்டும் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் "ஏனவன் பின் தங்கியவனாய் இருக்கிறான்?" என்ற வினாவைச் சமுதாயம் கேட்க வேண்டும் என்று அவர்கள் நினைப்பதில்லை. அவனது வீட்டுச் சூழ்நிலையும், சமுதாயப் பின்னணியும் இவ்வளவிற்குத் தக்க விடையளிக்கும். வாய்ப்புக்களைச் சரிசமமாக்கி விட்டால் அவை வீட்டுச் சூழ்நிலையைத் திருத்தியமைக்கும், குழந்தை கூட நற்கல்வி நல்கும். அரசாங்க இலாக்காக்கள் பலவும், மொத்தச் சமுதாயமும் ஒத்துழைத்தால் வாய்ப்புக்களைச் சரிசமமாக்கும் நோக்கம் நிறைவேறும்.

குழந்தைகள், ஆசிரியர்கள் எண்ணிக்கை, பள்ளிகளின் எண்ணிக்கை, ஆகியவற்றை வைத்துக்கொண்டு, கல்வி முன்னேற்றத்தைக் கவனிக்கின்ற பலர் அனேகமாக எல்லா நாடுகளிலும்

இருக்கின்றனர். ஆனால் அவர்கள் கல்வி முன்னேற்றத்தைக் கல்வித் தரத்தில் அறிவதில்லை. சரிசம வாய்ப்பு என்பது அளவையும் பொறுத்தல்ல, தரத்தையும் பொறுத்துளது. குழந்தைகளின் தலைகளை மட்டும் எண்ணினால் போதாது, அத்தலைகளுக்குள் என்ன செல்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும்.

குழந்தைகளின் காரண காரிய அறிவிற்கும், கற்பனைக்கும், உணர்ச்சிக்கும் வேலை கொடுக்க வேண்டும் என்றால் திடமிக்க ஆசிரிய மாணவ உறவு வேண்டும். இவ்வுறவினை வளர்த்துவிட மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கவேண்டும். ஆசிரியர்களின் தகுதி உயர்வாக இருக்க வேண்டும். இவ்வாறு செய்யாவிடில் சரிசம வாய்ப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை.

பள்ளிகளில் கட்டணம் வசூலிப்பதைக் கைவிடுவீராக. அப்போதுதான் வறுமை காரணமாக ஒரு குழந்தையால் படிக்கமுடியவில்லை என்ற நிலைமையை ஒழிக்க முடியும். பள்ளியின் பெயரைப் பெயர்ப்பலகையில் மாற்றி எழுதிவிடுவதாலேயே, குழந்தைகளுக்குச் சரிசம வாய்ப்புக்களை அதிகரித்து விட்டீர் என்று நினைக்காதிருப்பீராக. எலுமிச்சை ஊறுகாய் உள்ள சாடியின் மீது இன்பழ ஊறல் (Jam) என்று எழுதிய சீட்டினை ஒட்டியபோதிலும் சாடியில் இருப்பது எலுமிச்சை ஊறுகாய் தானே ?

★

சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்

★

பாலர் கல்வி என்ற இப்பத்திரிக்கை, தென்னிந்திய ஆசிரியச் சங்கத்தின் ஆதரவில், கடந்த முப்பதாண்டுகளாக, ஆரம்ப ஆசிரியர்களுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வேடு தமிழக அரசின் கல்வி அதிகாரியின் அங்கீகாரம் பெற்றுளது. இஃது ஒவ்வொரு தொடக்கநிலைப் பள்ளிக்கும் தேவைப்படும் விதத்தில் முன்னேற்றங்கள் பல செய்யவேண்டும் என்பது எங்கள் அவா. அதற்கான வழிவகைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஆதலால், சந்தாதாரர்களாய்ச் சேர்ந்துள்ள அன்பர்கள், தங்கள் பள்ளிகளிலோ வேறு பள்ளிகளிலோ பணிபுரியும் ஆசிரியர்கள், இன்னும் சந்தாதாரர்களாய்ச் சேராமல் இருப்பார்களேயானால், உடனே ஆண்டுச் சந்தா ரூபாய் மூன்று கட்டி சந்தாதாரர்களாய்ச் சேரும்படி செய்யவேண்டுமென்றும் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

இவ்வாண்டு அனுப்பவேண்டிய சந்தாவை யார் யார் அனுப்பவில்லையோ அவர்களுக்கெல்லாம் நினைவு மடல்கள் வரையப்பட்டுள்ளன. அவர்கள் கூடிய விரைவில் சந்தாத் தொகையை அனுப்புவீர்களாக.